**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – சிறப்புப் பள்ளிகள் – பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' என்னும் உயர்தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் – 2017–2018ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.9,07,200/– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 18**

**நாள்: 12.03.2018**
**ஹேவிளம்பி – மாசி, 28**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (D) எண் 79, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 15.11.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 3764/சிப.3/2017, நாள் 27.11.2017.

–––––

**<u>ஆணை</u>:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு DVD பிளேயர் உடன் ஹெட்போன் வாங்கி வழங்கிட ரூ.7,28,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மேற்கூறப்பட்டுள்ள அரசாணையின்படி, ஒரு DVD பிளேயர் குறுந்தகடு சாதனம் ரூ.5470/– என்ற விலையின் அடிப்படையில் 136 DVD Player with free Pen Drive கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கி செலவினம் மேற்கொள்ளப்பட்டது எனவும் 2017–2018ஆம் ஆண்டிற்கு பார்வையற்ற மாணவ / மாணவியர்களுக்கு DVD பிளேயர் வழங்குவதற்கு பதிலாக 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) என்னும் உயர்தொழில்நுட்ப உதவி உபகரணம் வழங்கினால் மாணவ / மாணவியர்களுக்கு மிகுந்த பயன் அளிப்பதாக அமையும் என தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவித்தனர் எனவும், 2017–2018ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கு 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அரசு பார்வைத்திறன் குறையுடையோருக்கான பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | 10ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை | 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | 22 | 23 | 45 |

(த.பி.பா.)

| | | | | |
|---|---|---|---|---|
| **2.** | பார்வைத் திறன் குறையுடையோர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருச்சி. | **17** | **17** | **34** |
| **3.** | பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி. | **21** | **20** | **41** |
| **மொத்தம்** | | | | **120** |

**3.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் **120** ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர் (Angel Pro Daisy Player) கொள்முதல் செய்வதற்கு **3** நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பட்டியல் பெறப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளியான ரூ.**9,07,200/–** என்ற பட்டியலை அளித்துள்ள 'Index Assistive Technologies, 30, Maker Arcade, Parade, Mumbai 400 005' நிறுவனத்தை அனுமதிக்கலாம் என தெரிவித்துள்ளார். குறைந்த விலைப்புள்ளியின் படி ஒரு 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்'(Angel Pro Daisy Player) விலை ரூ.**7,200/–** மற்றும் GST ரூ.**360/– (5%).**

| | | |
|---|---|---|
| **120** ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர் (Angel Pro Daisy Player) (Rs.7560 x 120 Nos. incl. GST at 5%) | | ரூ.**9,07,200/–** |
| மொத்தம் | – | ரூ.**9,07,200/–** |

**4.** மேலும், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் **10**ஆம் வகுப்பு மற்றும் **12**ஆம் வகுப்பு பயிலும் **120** மாணவ / மாணவியர்களுக்கு **2017–2018**ஆம் நிதியாண்டில் DVD பிளேயர் வழங்குவதற்கு பதிலாக 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்'(Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில் நுட்ப உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு ரூ.**9,07,200/–** நிதி ஒதுக்கீடும் உரிய திட்டத் தொடராணையும் வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**5.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் **10**ஆம் வகுப்பு மற்றும் **12**ஆம் வகுப்பு பயிலும் **120** மாணவ / மாணவியர்களுக்கு **2017–2018**ஆம் நிதியாண்டில் DVD 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில்நுட்ப உதவி உபகரணம் வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.**9,07,200/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணையிடுகிறது.

**6.** மேலே பத்தி–**5**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும் – **02** – சமூக நலன் – **101**– மாற்றுத் திறனாளிகள் நலன் மாநிலச் செலவினங்கள்–AA –பார்வையற்றோர் பள்ளி–**24** – பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு. **2235–02–101–AA-2407**)".

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,30,200/– 2017–2018ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2017–2018ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதி (ச.ந.)த் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நித்துறையின் அலுவல்சாரா எண் 10151/நிதி(சந)/2018, நாள் 07.03.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2897 (இரண்டாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று ஏழு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (சந/வ.செ.பொது–II) துறை, சென்னை–9.
அரசுச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.